சாட்சிகள் வாக்குமூலம்

பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.125/2021

வாக்குமூலம்: பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : A.சென்னித்துரை | த/பெ. | : அமராவதிக் கவுண்டர் |
| கிராமம் | : டி.கே.என்.புதூர் | வேலை | : சொசைட்டி வேலை |
| வட்டம் | : பழனி | வயது | : 43 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 13.06.2024 |

1973ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024ஆம் ஆண்டு ஜுன் மாதம் 13ஆம் நாள் அளித்த சாட்சியம்.

முதல் விசாரணை: என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது சாட்சியத்திற்கு ஆதரவாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். தாவாப்பாதை குறித்து வருவாய்த்துறை புலப்பட நகல் கணிணி நகல் பி.வா.சா.ஆ.2. எங்கள் நிலத்திற்குரிய கணிணி பட்டா (எண்ணிக்கை–8) பி.வா.சா.ஆ.3. 27.08.2021, 20.09.2021 தேதிகளில் தாவாப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொடுக்கக் கோரி பிரதிவாதிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு நகல் (எண்ணிக்கை–2) பி.வா.சா.ஆ.4. எலந்தமர கருப்பணசாமி, கன்னிமார் திருக்கோவில் மஹா கும்பாபிஷேக 3ம் ஆண்டு அழைப்பிதழ் பி.வா.சா.ஆ.5. அரசு எனக்கு வழங்கிய ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பி.வா.சா.ஆ.6. வழக்குச்சொத்தின் மாதிரி வரைபடம் பி.வா.சா.ஆ.7. வழக்குச்சொத்தின் வழிகாட்டி மதிப்பு விபரம் பி.வா.சா.ஆ.8.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R KARTHIKEYAN Digitally signed by R KARTHIKEYAN Date: 2024.06.13 15:25:22 +0530

District Munsif,

Palani.